பாவலர்
தெ.அ.துரையப்பாபிள்ளை
நினைவுப் பேருரை - 2007

# சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி

# Media Literacy Education for Social Development

பேராசிரியர் என்.சண்முகலிங்கன் M.A PhD
சமூகவியல் பேராசிரியர்,தலைவர்
சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை 24.06.2007

சமூக மேம்பாட்டுக்கான ஊடக அறிவுக் கல்வி

# Media Literacy Education for Social Development

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
சமூகவியல் பேராசிரியர்
தலைவர் சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஊடக அறிவு என்ற பதம் தமிழுக்குப் புதியது. ஆனாலும் அதன் அவசியம் எங்களுக்காகி வெகு நாட்களாகிவிட்டது. புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவான வெகுஜன ஊடகங்களின் நீட்சியில் எங்களின் அனைத்துவகை அனுபவங்களும் நிர்ணயமாகின்றன. ஏற்கனவே இருந்த அனுபவங்கள் உருமாற்றப்படுகின்றன. நுண் நிலையில் தனிமனிதரிடத்தும் பரு நிலையில் பண்பாட்டுத் தளத்திலும் துரிதமாகவே இந்த மாற்றங்கள் நிகழ்கின்றன.

நவீன சமூக உலகை விளங்கிக் கொண்டு அதிலே அர்த்தமுள்ள வினைத் திறனான மேம்பட்ட வாழ்வினைக் காண்பதிலிருந்து இந்த நவீன வாழ்வு எங்களுக்குத் தந்துள்ள துயரங்களிலிருந்து கற்பனை சுகமென

தப்பிக் கொள்வது வரை ஊடகங்கள் எங்களுக்குள் விதைக்கின்ற வாழ்வின் பரிமாணங்கள்.

எங்களது அறிவு, மனவெழுச்சி, அழகியல், ஒழுக்கவியல் என அனைத்து முகங்களிலும் ஊடகங்கள் விதைக்கின்ற பண்பாட்டின் தாக்கங்கள். இன்றைய மனிதனின் நீட்சியாய் அவன் பார்வை, கேள்வி, தொடுகை, காலம், வெளி, என எல்லாமே ஊடக ஆட்சியின் கீழ் உள்ளன.

மூன்றாம் உலக நாடுகள் என்றும், வளர்முக நாடுகளில் பிரஜைகள் என்றும் பல்வேறு தர நிர்ணயங்களில் தாழ் நிலையைப் பெற்ற போதும் ஊடக பாவனை என்ற அளவு கோலில் வளர்ச்சியடைந்த நிலையில் எங்கள் இருப்பு.

எங்களது இந்த இருப்புக்கான மிக எளிதான ஒரு குறிகாட்டியாக ஒரு நாளில் எங்கள் வீட்டுத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால எத்தனை மணி நேரம் குந்தியிருக்கின்றோம் என்ற அளவீட்டினைக் குறிப்பிடலாம். அவ்வாறே இந்த வெகுஜன ஊடகங்களின் வழி எதனைப் பெற்றுக் கொள்ளுகின்றோம்? நாம் பெறுகின்ற வற்றின் சமூகப் பெறுமதி எத்தகையது? அவை நமக்குள் விதைக்கின்ற நம்மூடாக நாம் வாழும் சமூகத்துக்கு தருகின்ற விழுமியங்கள் எத்தகையன என்ற வினாக்களுக்கான விடைகளைக் காண்கின்ற வழிமுறையாகவே ஊடக அறிவு என்ற புதிய அறிவுப்பரப்பின் தரிசனம்.

ஒரு காலத்தில் ஒரு சமூகத்தின் மேம்பாட்டினை அளப்பதற்கான இன்றியமையாத குறிகாட்டியாக எழுத்தறிவு பயன்பட்டது இன்றும் கூட அதன் முக்கியத்துவம் உள்ளது. வாய்மொழியான அறிவின் கையளிப்பு எழுத்தறிவுப் பண்பாட்டுடன் பாரிய மாற்றங்களைக் கண்டது. இன்று எழுத்தறிவைக் கடந்து ஊடகங்களின் வழியான அறிவும் பண்பாடும் வியாபாரமாகியுள்ளது. தங்கள் இருப்புக்கும் நிறைவான வாழ்விற்கும்

அரணாகும் ஊடகங்களை மக்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்கின்றனர், அதன் உச்சப்பயன்பாட்டை எப்படி உறுதி செய்யலாம் என்ற எல்லைகளுக்குள் ஊடக அறிவின் தேடல் இன்று உலக சமூகங்கள் பலவற்றிலும் ஆரம்பமாகி உள்ளது (Potter 1998).

கிட்டத்தட்ட 40 நாடுகளின் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இன்று ஊடக அறிவு இடம்பிடித்துள்ளது ஆரம்ப, இடைநிலைப்பாடசாலை மட்டங்களில் ஊடக அறிவின் பயன்களைப் பெற்றுள்ள இந்த நாடுகளின் அனுபவங்கள் எங்களுக்காவது எப்போது? தாமதிக்கும் கணங்கள் எல்லாம் பாதகமானவையே எனும் சமூக சிந்தனையாளர்களின், சமூகவியலாளர்களின் ஆதங்கத்தினை அடியாகவே இன்றைய இந்த நினைவுப் பேருரை வடிவம் பெறுகின்றது.

குடியேற்ற நாட்டாதிக்ககாலத்து சுய பண்பாட்டின் மேன்மைக்கான காவலராக எங்கள் பண்பாடு கண்ட ஆளுமை பாவலர் துரையப்பாபிள்ளை. சுயபண்பாட்டு மேம்பாட்டுக்கான பாவலரின் பணிகள் பன்முகத்தன. சிந்தனையாளராக, செயல்வீரராக அவர் தடம்பதித்த துறைகளில் பத்திரிகைத் துறையும் ஒன்றாகும். அந்நாளில் அந்த ஊடகங்களை சமூக அறிவு மேம்பாட்டுக்காய் பயன்படுத்திய பாவலரின் அர்ப்பணிப்பும் ஊடக அறிவும் விதந்துரைக்கப்படுவது. பாவலர் காலத்து ஊடகங்களின் பரப்பெல்லையைக் கடந்து புதிய புதிய ஊடக வலைப் பின்னல்களுக்குள் எங்கள் வாழ்வு புகுந்து ஒரு நூற்றாண்டாகிறது.

மனித சமூக மேம்பாட்டுக்கான மிகச் சிறந்த ஊடகமாக கல்வியைக் கண்டு, அதனை எங்கள் மகாஜனக் கல்லூரியின் வழி நிதர்சனமுமாக்கிய மகாநுபவரின் நினைவுப் பேருரைத் தலைப்பாக இன்றைய எங்கள் சமூக மேம்பாட்டிற்கு இன்றியமையாதது என உணரப்படும் ஊடக அறிவு கல்வி பற்றிய சிந்தனை அமையும் பொருத்தப்பாட்டில் நெஞ்சம் நிறைகின்றது.

பாவலரின் தோட்டத்தில் வளர்ந்த பயிர்; அவரது சிந்தனைச் சோலையில் பூத்த மலர் நான். சின்ன வயதில் இருந்தே எனக்குள் மகாஜனா எழுதிய அறிவியல் தரிசனங்களும் சமூக உணர்வு சார்ந்த கலையியல் அனுபவங்களும் ஒன்று சேர இன்று ஒரு சமூகவியல் பேராசிரியராக உங்கள் முன் நிமிரும் இந்த பேறு எனக்கானது. பாவலர் பெரிதும் நேசித்த சமூக அறிவியல் எனது கல்விப் புலமானது போலவே அவருக்கு நெருக்கமான ஊடகவியலும் என் ஆய்வனுபவப்பரப்பானது. இந்த வகையில் நானும் எனது மாணவர்களும் எங்கள் புலத்து மேற்கொண்ட ஊடகவியல் சார்ந்த ஆய்வனுபவங்களினடியாகவே இந்த உரையின் கருத்தாக்கங்களும் கலந்துரையாடலும் அமையப்ப பெறுகின்றன.

II

வெகுஜன தொடர்புச் சாதனங்களில் அதிக தாக்கம் கொண்டதாக விளங்கும் தொலைக்காட்சியும் தொலைக்காட்சியின் விரிவாக்கமாகவே எங்கள் புலங்களில் உணரப்படும் வீடியோவுமே இந்த உரையின் குவி மையங்களாகின்றன. தனியனிலிருந்து சமூகம் வரை ஆழ்ந்த செல்வாக்கினைக் கொண்டுள்ள இந்த ஊடகங்களின் பாவனை யாழ்ப்பாணத்தில் எவ்வாறுள்ளது?

தேர்ந்தெடுத்த சமூகப்புலங்கள், பாடசாலைகள், இந்த ஊடக உள்ளடக்க வினியோகஸ்தர்களுடனான நேர்காணல்கள், அவதானங்களினடியாக எங்களது ஆய்வுகள் வெளிப்படுத்திய உண்மைகள் கவலை தருவன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கென தரப்படும் நேரம், அதிகளவு நுகரப்படும் நிகழ்ச்சிகளின் தன்மை, வீடியோவைப் பயன்படுத்தும் விதம், வீடியோ நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கும் விதம் என்பன பற்றிய அடிப்படையான கேள்விகளுக்கு நாங்கள் கண்ட பதில்கள் எமது சமூகத்து ஊடக அறிவின் மோசமான நிலைமையை பிரதிபலிப்பனவாகவே உள்ளன.

தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கான காரணங்களில் பொழுதுபோக்கு என்பதே அதிகளவு வீதத்தில் அமைந்திருந்தது. யாழ்ப்பாண நகரத்தை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 சதவீத மானவர்கள் பொழுதுபோக்கிற்காகவே தொலைக்காட்சி நுகர்வு என்ற அதே வேளையில் 15 வீதத்திற்குக் குறைவானவர்களே ஏனைய அறிவியல் தகவல் பெறும் நோக்கிற்காக எனும் பதிலைத் தந்திருந்தனர் (ஜெயந்தினி 2003). இன்னும் சில புலங்களில் காரணம் இலலாமலே தொலைக்காட்சிக்கு அடிமையாகிப் போயுள்ளவர்கள் பற்றிய பதிவுகளையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் ஆய்வுக்கு உட்பட்டவர்களில் கிட்டத்தட்ட 40 சதவீதமான மாணவர்கள் தாம் தொலைக்காட்சிக்கு அடிமையாகி விட்டோம் எனக் குறிப்பிட்டனர். (Smith 1986) எங்களது சூழலில் 10 - 15 சதவீதத்தினர் தான் இவ்வாறான வகைப்பாட்டிற்குள் அடக்கக் கூடியவர்களாக உள்ளனர். எனினும் இந்த அளவு அதிகரித்துச் செல்வதாகவே உணர முடிகிறது.

இவ்வாறாக சதா தொலைக்காட்சிக்குள் அமிழ்ந்து போகும் குழந்தைகளின் குடும்ப சூழல் பற்றிய தரவுகளும் இங்கு நம் கவனத்திற்குரியன. பிள்ளைகளோடு தங்கள் நேரத்தினை பகிர முடியாத பெற்றோர்கள் அல்லது அன்பாதரவாக நடந்து கொள்ளாத பெற்றோர்களைக் கொண்ட இல்லங்களிலேயே இவ்வாறான எல்லை கடந்த நுகர்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகு தொலைக்காட்சி, வீடியோ காட்சி சூழமைவு பற்றிய அவதானிப்புகளும் கவனத்திற்குரியன. நடுவீட்டுக்குள் தெலைக்காட்சி தரிசனம், படிக்கின்ற பிள்ளைகள், "படியாத பெரிய பிள்ளைகள்", அனைவரினதும் சங்கமம். சமூக மேம்பாட்டிற்கான குறிகாட்டியாகக் கருதப்படும் எழுத்தறிவு, கல்வி அடைவுகளுக்கும் தொலைக்காட்சி, வீடியோ தரிசனங்களுக்கும் குறிப்பிடத்தக்களவுக்கு இணைப்பு இருப்பதாகத் தெரிய வரவில்லை. எனினும் பிள்ளைகளின் கல்வி,

பரீட்சை பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்கும் வேளைகளில் பிள்ளைகளை படிக்கும் அறைக்குச் செல்ல நிர்ப்பந்திக்கும் நிலைமைகளை அவதானிக்க முடிகிறது. எங்களது ஆய்வுக் களங்களில் கிட்டத்தட்ட 20சதவீதமான இல்லங்களில் மட்டும் பெற்றோர்களின் ஊடக விழிப்புணர்வு தொலைக்காட்சிப் பாவனையை முற்றாகத் தவிர்ப்பதன் வழி வெளிப்பட்டது. மிகச் சிறிய அளவில் 5 வீதமான இல்லங்களில் மட்டும் ஓரளவுக்கு நிகழ்ச்சிகளைத் தேர்ந்து பார்க்கும் நிலைமையை காண முடிகிறது.

தொலைக்காட்சி நிகழ்ச்சி தெரிவு என நியமங்கள் பெரிதாக ஏதுமில்லை. தரப்படும் தொலைக்காட்சித் தொடர்களின் அஞ்சல் ஓட்டமாகவே அது அமைந்து விடுகிறது. இந்த அஞ்சல் ஓட்டத்தின் தரிசன அளவுக்கேனும் வீடுகளில் பெண் விடுதலை உள்ளது. “கிரிக்கட் மச்” தொடர் ஒளிபரப்பு வேளைகளில் மட்டும் ஆணாதிக்கம் வெற்றி பெறுகிறது. (இந்நாட்களில் தொலைக்காட்சி சீரியல்கள் நிறுத்தப்பட்டு விடுவதும் உண்டு)

பொதிகை போன்ற தேசிய தொலைக்காட்சி நிலைய ஒளிபரப்புக்கள் மற்றும் அறிவு சார்ந்த ஒளிபரப்புக்கான நேர ஒதுக்குகை மிக மட்டுப்பாடானதாகவே உள்ளது. இவ்வளவு நெருக்கடிகளிடை யேயும் “டிஸ் அன்ரனா”, “கேபிள் ரிவி” தொழில்நுட்ப வசதிகள் இங்கு பரவலாகி வருகின்றமையும் கவனத்திற்குரியது. வீட்டிலே கேபிள் ரிவி பொருத்துவதற்கான விவாதங்களில் அறிவு பூர்வமான காரணங்களாக National Geographic Channel, B.B.C உலக செய்திகள் போன்றவை முன்வைக்கப்பட்டாலும் தொடர்பு கிடைத்த பின் சன் ரீவிக்கே நேரம் போதாமல் போய்விடுகின்றது. “சலனத்திலிருந்து கோலம்” வரை தொடக்க இசையே பலருக்குப் பாடமாக இருக்கின்றது.

மின்சாரம் எட்டாத அல்லது எட்டியும் கிட்டாத இல்லங்கள் இந்தத் தொடர் ஊடக சாதனங்களை இன்னமும் தொட முடியாத இல்லங்களைப் பொறுத்த வரையில் மேற்குறித்த நிலைமைகள்

பொருந்தா எனினும் அவ்வாறான இல்லங்களின் ஏக்கப் பெருவெளியில் இந்தத் தொலைக்காட்சி கனவுகள் நிறைந்திருப்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். வாடகை ஜெனரேட்டர், ரிவி, டெக் உபயத்தில் வீடியொ நுகர்வும் இவர்களின் ஏக்கங்கள் தணிக்கப்படுகின்றமையும் இங்கு நம் கவனத்திற்குரியன.


எங்கள் புலங்களில் ஒட்டு மொத்தமான வீடியோ பாவனையும் அறிவுபூர்வமானதல்ல. வீடியோ பாவனை தொடர்பான உலகின் நலமான அனுபவங்கள் எங்களிடம் இல்லை. மரபார்ந்த வெளிப்பாட்டுக் கலைகளை, பண்பாட்டியல் விபரணங்களை, கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை காண்பதற்கான மார்க்கமாக யுனெஸ்கோ போன்ற பண்பாட்மைப்புக்கள் வீடியோவை சித்தரிக்கும் அறிவுத்தளம் இங்கு அறியப்படாத அனுபவமாகும். (Shanmugalingan 2001) அறிந்தவர்களுக்கும் அதனை வழங்குவதற்கு யாரும் இல்லை. தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பயனான நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு நேர நிர்ப்பந்தம் உள்ளவர்கள் அவற்றினைப் பதிவு செய்து தமக்கு வாய்ப்பான நேரங்களில் காண்பதற்கான கருவியாகவே வீடியோவின் வரவு என்ற கருத்தாக்கத்திற்கும் (Levy 1983 Dominick 1994) இங்கு அர்த்தமில்லை.

தொலைக்காட்சிக்குள்ள அதே தெரிவு நியாயங்களே வீடியோவுக்குமாகின்றது. தொலைக்காட்சிக்கு வராத திரைக்கு வராத “புத்தம்புதிய திரைப்படங்களை” பார்ப்பதற்கு அல்லது தமக்கு பிடித்த நாயகர், நாயகிகளை மீள மீள காண்பதற்கு அவர்களது ஸ்ரைல் பாவனைகளை கற்றுக் கொள்வதற்கான பயிலரங்குகளாகவே வீடியோத் தெரிவுகள் தரிசனங்கள்.

இவற்றுக்கு மேலாக பண்பாடு கண்ட வாழ்க்கை வட்டச் சடங்குகளான பூப்புசடங்குகள், திருமணம் போன்றவற்றினை

கொச்சைப்படுத்தும் வீடியோப் படப்பிடிப்புகள் சுற்றம் சூழ பின்னர் இவற்றை ரசிக்கின்ற அபத்தங்கள் இடைக்காலத்து பூப்புச் சடங்குகளை நடத்துவதற்கு மறுப்புச் சொன்ன பிள்ளைகள் இப்போது வீடியோ படப்பிடிப்பிற்காகவே பெற்றோரை நிர்ப்பந்திப்பதாகவும் நியாயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த அபத்த நாடகத்தில் இன்று மரண வீடுகளும் தப்பவில்லை. (கிருஸ்ணகுமார் 1996; சண்முகலிங்கன், 2000)

மேற்கண்ட இந்த நிலைமைகளின் விளைவுகளைப் பற்றிய சிந்தனை கிஞ்சித்துமில்லாமல் மின்சாரக் கனவாக எல்லாம் நடக்கின்றது. பல்வேறு தளங்களிலும் இந்தக் காட்சி அனுபவத் தாக்கங்கள் வெளிப்படுகின்றன.




காட்டுரு (ஜெயந்தினி, 2003)

சமூகவியலாளர்களான பீற்றர் பேஜர் (Peter Beger) தோமஸ் லக்மன் (Thomas Luckman) போன்றோர் முன்வைத்த சமூக

யதார்த்தங்களை கட்டமைக்கும் வெகுஜன ஊடகக் கோட்பாடு எங்கள் சமூகச் சூழலுக்கு வெகுவாகவே பொருந்துகிறது. ஒரு புறத்தில் தங்களை இழப்பதும் மறுபுறத்தில் சூழமைவின் நலங்களைத் துறப்பதுக இந்தக் கனவுப் பயணம் தொடர்கின்றது.

பிள்ளைகளால் படிக்க முடியவில்லை அல்லது படிப்பதற்கான நேரம் சுருங்கிப் போய் உள்ளது. இவ்வாறே விளையாடுவதற்கான நேரம், அம்மா அப்பா சுற்றத்துடன் உறவாடுவதற்கான நேரம், ஓய்வெடுப்பதற்கான நேரம் என அனைத்துமே குறுகிப் போகிறது. சமூக ஈடுபாடு என்பதே முற்றாக அற்றுப் போகிறது. பிள்ளைகள் இயல்பாக வளர்வதற்கும் ஆற்றல்களைப் பெறுவதற்கும் இன்றியமையாத தேடலையும் ஆக்கத்திறனான கற்பனையையும் சாகடித்து "முட்டாள் பெட்டி" ஒன்றுக்குள் முகம் புதைக்கும் இருப்பையே மிஞ்ச வைக்கிறது.

ஊடகங்கள் சார்ந்த எங்கள் சமூகத்தின் நிலைமை பற்றிய இந்த தரிசனங்களிடை ஊடகவியல் அறிஞரான மார்ஷல் மக்லூகன் குறிப்பிட்ட அர்த்தமுள்ள வார்த்தைகள் மேலெழுவது தவிர்க்க முடியாதது. "மீன் தன் ஈரத்தை உணருமா" என்ற வினாவை எழுப்பி இல்லை என்ற பதில் தந்து விளக்கமும் சொல்லுவார் மக்லூகன். நீரின் மேலாண்மைக்குள் இருக்கும் வரை உணரப்படாத உண்மையை உணரும் நிலைமையை என்பது நீருடனான அதன் தொடர்பறு நிலைமையாக நிகழ முடியாத ஒன்றாகவே அவரால் குறிப்பிடப்படும்.

எங்களது நிலைமையை விளங்கவும் விளக்கவும், இந்த மீன் கதை பயன்பட்டாலும் நிலைமையை மேம்படுத்தலில் அவநம்பிக்கையை தந்துவிடும் இந்த இடத்தில் தான் ஊடக அறிவு வரப்பிரசாதமாகின்றது.

## II

எங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஊடக அறிவிற்கான இன்றியமையாத இடத்தை உறுதி செய்வதில் இனியும் காலதாமதம்

கூடாது. கல்விக் கொள்கை வகுப்பாளர்கள், கல்விச் சமூகவியலாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகிய அனைவரும் பங்கேற்கும் சிந்தனைக் களங்களின் வழி ஊடக அறிவு கல்விக்கான திட்டங்கள் செயல் வடிவம் பெற வேண்டும்.

- ஊடகங்களின் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு
- வெகுஜன தொடர்பு ஊடகங்களின் உள்ளடக்கங்களை பகுப்பாய்வு செய்து பகுத்துணரும் திறன்.
- நல்லதை ஆராதிக்கவும் அல்லாததை தவிர்ப்பதற்குமான ஏற்பாடுகளைக் காணல்
- எங்களுக்கு வேண்டிய நலமான ஊடகங்களை ஊடகப் பண்பாட்டினை கட்டியமைத்தல்.

எனும் இலக்குகளை குவி மையமாகக் கொண்டு எங்களின் ஊடக அறிவுக்கான கலைத்திட்ட வகுப்பும், கற்பித்தலும் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். ஊடக அறிவு பற்றிய இந்த செயற்பாடுகள் தனியன்களை நோக்கியதாக நுண்நிலையில் அமையும் அதே வேளை பரு நிலையில் ஒட்டுமொத்தமான சமூக மேம்பாட்டுக்கும் பண்பாட்டு மேம்பாட்டுக்கும் உரிய விதத்தில் எங்கள் செயற்பாட்டினை திட்டமிடுவதும் அவசியமாகும்.

இன்றைய உலகமயமாக்க அலைகளிடை சுதேச பண்பாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் கொஞ்சமல்ல. அன்னிய நியமங்கள் விழுமியங்களை ஊக்குவிக்கும், உள்ளூர் பண்பாடுகளை தாழ நோக்கும் படைப்புக்கள் பல்தேசியக் கம்பனிகளின் தயாரிப்புக்களாய் உலகச் சந்தை வழி மிக மலிவாகவே உள்வந்து விடுகின்றன.

நிகழ்பவற்றை நியாயப்படுத்தும் விதமாக Think Globally, Act Locally உலகளாவிய நிலையில் சிந்தி உள்ளூர் தனமாய் செயற்படு

என்ற பொன் மொழிச் சுலோகங்களும் முன்வைக்கப்படுகின்றன. இந்தப் புதிய சிந்தனைகள் தீர்க்க தரிசனங்கள் போல உள்ளூர் பண்பாடுகள் உலகமயமாதலுக்கான சில உதாரணங்களை காண முடிந்தாலும் உலகப பண்பாடு உள்ளூர் மயமாகுமா?

தேச எல்லைகளை அர்த்தமற்றதாக்கு தனியன்களின் பண்பர்டு அடையாளங்களை இல்லாமல் செய்து வெறும் நுகர்வாளர்களாக தனியன் கனவுகளை ஆராதிக்கும் இன்றைய ஊடகப் பண்பாட்டின் மாயத்திரை விலக்கி, உலக சமுதாயத்தை, மனித பண்பாடுகளை மீட்கும், காக்கும் பணியில் புதிய ஊடகங்களை உருவாக்கவும் புதிய ஊடகப் பண்பாட்டினை வளர்க்கவும் ஏற்ற செயற்பாடுகளையும் இந்த ஊடக அறிவு இயக்கச் (Media Literacy Movement) செயற்பாடகவே மேற்கொள்வதும் இன்றியமையாதது.

எங்கள் பாடசாலைகளின் எல்லைகள் குறுகி, எங்கள் பாடசாலைகளுக்கான பாதைகள் மூடி, பாடசாலைகளினதும் பாரம்பரிய கிராமங்களினதும் வாழ்வுச் சூழலை எங்கள் மண்ணுக்கு உதவாத கேடு விளைவிக்கும் “இப்பிலிப்பில்கள்” மூடி, எங்களுக்கான எங்களுக்கான சமூக நீதியும் இருப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள இந்த சூழமைவிலும் அதனை உணராது கனவுச் சுகமென இந்த நச்சு ஊடகங்களின் வலைக்குள் கிடப்போமா

இத்தனை இடரிடையும் கல்வியைக் கைவிடோம் என்ற உறுதியுடன் நடைபோடும் என் அன்பான மாணவச் செல்வங்களே, அவர்களை உருவாக்கும் ஆசிரியச் சிற்பிகளே, அதிபர் உள்ளிட்ட கல்வி நிர்வாக வழிகாட்டிகளே, அன்பான பெற்றோர்களே இந்த நினைவுப் பேருரையின் நிறைவுக் கணத்திற்கு வந்திருக்கின்றோம். இதுவே எங்கள் கலைத்திட்டத்திலும் எங்கள் கல்விச் செயற்திட்டத்திலும் ஊடக அறிவு

இடம்பெறுவதற்கான தொடக்கக் கணமாக வேண்டும் என்பது என் வேணவா.

கல்வி உலகிலும் ஏனைய பிற துறைகளிலும் முன்னோடியாக பல சாதனைகளைப் பதித்த எங்கள் மகாஜனா கால முக்கியத்துவம் கொண்ட ஊடக அறிவை இந்தத் தலைமுறைக்கு வழங்கும் பெரும் பணியில் முன் உதாரணமாக அமையும் என்பது திண்ணம்.

"வெல்லுக மாகாஜன மாதா வெல்லுக மகாஜனா தலைவர்"

## உசாத்துணைகள்


கிருஸ்ணகுமார்.தி (1996) - யாழ்ப்பாணச் சமுதாயத்தில் வீடியோ கலாசாரச் செல்வாக்கு சமூகவியல் சிறப்புக் கலை ஆய்வுக் கட்டுரை (பிரசுரமாகாதது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சண்முகலிங்கன்.என் (2000) - சமூக மாற்றத்தில் பண்பாடு சவுத் விஷன் சென்னை

ஜெயந்தினி.இ. (2003) - தொலைக்காட்சியும் சுயமெய்யுருவும் சமூகவியல் நுண்ணாய்வு சமூகவியல் சிறப்புக்கலை ஆய்வுக் கட்டுரை(பிரசுரமாகாதது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Dominik, Joseph.R (1994) - **The Dynamics of Maas Communi cation** Mc.Graw Hall series, Inc New York

டுநஎல.ஆ (1983) - The Time Shifting use of Home Video Recorders in **Journal of Broadcasting and Electronic media Vol - 27**

Potter, W.James (1998) - **Media Literacy** Thousand Oaks, CA:sage

Shanmugalingan.N (2001) Fantacy toReality Video culture in Jaffna, in **Globalization, Electronic media and cultural** Change (ed:S.T.Heltege, Markus Mayer & Ayoma), German cultural Institute, Colombo.

Smith.R (1986) - Television Adiction, in **Perspectives on media effects** (ed : J.Brayant & D.Zillmann) USA.